# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **57**

| | | | |
|---|---|---|---|
| Name: | அப்துல்மஜித் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A 1, A11, A12, present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of** 29.05.2023

**முதல் விசாரணை**:

நான் தென்காசி மாவட்டம் மவுண்ட் ரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் தென்காசி கூலக்கடை பஜாரில் ஹாஜா ஸ்டோர்ஸ் என்ற பெயரில் பெயிண்ட் கடை நடத்தி வருகிறேன். இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பிரச்சனை உள்ளதா என்று எனக்கு தெரியாது. நான் எந்த கட்சி அமைப்பிலும் இல்லை. எங்கள் ஊரை சேர்ந்த குமார் பாண்டியன், மைதீன்சேட் என்பவர்களை தெரியாது. நான் வழக்கமாக 9.00 முதல் 10.00 மணிக்கு கடையை திறந்து இரவு 9.00 மணிக்கு கடையை அடைப்பேன் கடந்த 15 வருடங்களுக்கு முன் ஒருநாள் எனது கடைக்கு கிழக்கு பக்கமாக கூலக்கடை பஜார் வழியே ஆட்கள் திடீர் என ஓடி வந்தார்கள். சண்டை நடந்து வருகிறது கடையை அடைக்கச்சொல்லி ஓடி வந்தார்கள். நானும் கடையை அடைத்துவிட்டு ஓடிவிட்டேன். சுமார் 2 மூன்று நாட்கள் கடையை அடைத்துவிட்டோம். பின்னர் வர்த்தகசங்கத்தினரும், காவல்துறையினரும் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். கடையை திறந்து வியாபாரம் செய்ய

சொன்னார்கள். அதன் பின்னர் கடையை திறந்தோம். இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பிரச்சனை என்று சொன்னார்கள். ஒருவருக்கொருவர் தகராறு செய்து வெட்டிக்கொண்டார்கள் என்று தெரிந்துகொண்டேன். இந்துபோனார்களா, காயம் பட்டார்களா என்று எனக்கு தெரியாது. எதிரிகளை நான் பார்த்ததில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார்கள் என்னை விசாரித்தார்கள் என்றும் அவர்கள் விசாரித்தபோது 14.08.2007 ம் தேதி காலை 10.15 மணிக்கு எனது கடைக்கு கிழக்கு கூலக்கடை பஜார் விலக்கில் இரண்டு பார்ட்டியும் பெரிய அரிவாள், கத்தி , இரும்பு பட்டையுடன் மோதி தாக்கி கொண்டார்கள் என்றும் அதில் சிலருக்கு அரிவாள் வெட்டுகாயங்கள் ஏற்பட்டது என்றும் இரண்டு பார்ட்டியிலும் தலா மூன்று பேர் இறந்துவிட்டார்கள் என்றும் ஆனால் அவர்கள் யார் யார் என்று எனக்கு தெரியாது என்றும் சம்பவத்தை பார்த்து பக்கத்து கடைக்கார்கள் கடைகளை அடைத்து சென்றார்கள் அதனால் நானும் கடையை அடைத்துவிட்டு சென்றுவிட்டேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்லல. நான் நெடுநாட்களாக அதே பகுதியில் கடை நடத்தி வருவதால் எதிரிகளை தெரியும் காயம் பட்டவர்களை தெரியும் என்றும் எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**